# SAI BANKING ACADEMY
# TNPSC GROUP - 4 (GENERAL TAMIL)

1. காப்பியத்தின் இலக்கணம் கூறும் நூல் எது?
a) தொல்காப்பியம் b) நன்னூல் c) தண்டியலங்காரம் d) தொன்னூல் விளக்கம்

2. தமிழன்னைக்கு அணிகலன்களாக விளக்கும் நூல்களை பொருத்துக:
A) காது - 1) சிந்தாமணி
B) கைகள் - 2) மணிமேகலை
C) மார்பு - 3) குண்டலகேசி
D) இடுப்பு - 4) சிலப்பதிகாரம்
E) பாதம் - 5) வளையாபதி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a) | 3 | 5 | 1 | 2 | 4 |
| b) | 5 | 4 | 3 | 1 | 2 |
| c) | 3 | 5 | 4 | 1 | 2 |
| d) | 4 | 3 | 5 | 2 | 1 |

3. "சிலப்பதிகாரம் என்று ஓர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாடியவர் யார்?
a) பாரதிதாசன் b) பாரதியார் c) தாராபாரதி d) சுத்தானந்த பாரதியார்

4. பொருத்துக:
A) குறிஞ்சி - 1. கானல் வரி
B) முல்லை - 2. குன்றக் குரவை
C) மருதம் - 3. வேட்டுவ வரி
D) நெய்தல் - 4. ஆய்ச்சியர் குரவை
E) பாலை - 5. நாடுகாண் காதை

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a) | 5 | 4 | 3 | 2 | 1 |
| b) | 3 | 1 | 4 | 5 | 2 |
| c) | 4 | 3 | 2 | 5 | 1 |
| d) | 2 | 4 | 5 | 1 | 3 |

5. "கற்கை நன்றே; பிச்சை புகினும், கற்கை நன்றே" என்று கல்வியின் அவசியத்தை பாடியவர் யார்?
a) திருவள்ளுவர் b) ஔவையார் c) அதிவீரராம பாண்டியன் d) கம்பர்

6. "தேரா மன்னா செப்புவ துடையேன்" என்ற கூற்று யார் யாரிடம் கூறியது?
a) காவலன் பாண்டிய மன்னனிடம் b) கோவலன் பாண்டிய மன்னனிடம்
c) கோப்பெருந்தேவி பாண்டிய மன்னனிடம் d) கண்ணகி பாண்டிய மன்னனிடம்

7. மணிமேகலை நூலில் உள்ள காதைகளின் எண்ணிக்கை?
a) முப்பது b) இருபத்தி மூன்று c) முப்பத்தியேழு d) இருபத்தி நான்கு

8. 1) கன்னியர் ஏழுவருள் இளையவள் பிபாரி.
2) இறைவனை நடனமாடச் செய்தவள் காளி
3) காட்டினை இருப்பிடமாகக் கொண்டவள் பத்ரகாளி.
4) தாருகனின் மார்பை பிளந்தவள் துர்கை.
இவற்றின் தவறான இணைகள் எவை?
a) 1 மற்றும் 4 b) 2 மற்றும் 4 c) 2 மற்றும் 3 d) 3 மற்றும் 4

9. மணிமேகலையில் கூறப்படும் பத்து வகைக் குற்றங்களில் சரியான விகிதங்கள் எவை?
a) சொல் குற்றம் - 4, உடல் குற்றம் - 4, உள்ளக் குற்றம் - 2.
b) சொல் குற்றம் - 4, உடல் குற்றம் - 3, உள்ளக் குற்றம் - 3.
c) சொல் குற்றம் - 3, உடல் குற்றம் - 3, உள்ளக் குற்றம் - 4.

d) சொல் குற்றம் - 3, உடல் குற்றம் - 4, உள்ளக் குற்றம் - 3.

10. தமிழின் முதல் சமயக் காப்பியம் எது?
a) குண்டலகேசி b) மணிமேகலை c) சீவக சிந்தாமணி d) வளையாபதி

11. 1) திருத்தக்கத்தேவர் சமண சமயத்தை சேர்ந்தவர் 2) சீவக சிந்தாமணி தழுவல் நூல்
3) விருத்தப்பாவால் ஆன முதல் நூல் 4) நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்
தவறான கூற்று எது? / எவை?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) எதுவும் இல்லை d) 1, 2, 3, 4

12. ஐம்பெருங்காப்பியங்களில் புத்த மதத்தைச் சார்ந்தவை எவை?
a) குண்டலகேசி, மணிமேகலை b) குண்டலகேசி, வளையாபதி
c) சிலப்பதிகாரம், மணிமேகலை d) மணிமேகலை, வளையாபதி

13. "<u>வர்த்தமான தேவர்</u>" என்ற இயற்பெயரைக் கொண்டவர் யார்?
a) வர்த்தமான மகாவீரர் b) தோலாமொழித் தேவர் c) திருத்தக்க தேவர்
d) முத்துராமலிங்க தேவர்

14. மைசூரில் உள்ள சிரவண பெலகோலாக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்ட தமிழ்ப்புலவர்கள் யாவர்?
a) கம்பர், வால்மீகி b) கம்பர், திருத்தக்க தேவர் c) தோலாமொழித் தேவர், கம்பர்
d) திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர்

15. சீத்தலை சாத்தனாரை "தண்டமிழ் ஆசான்" என்று அழைத்தவர் யார்?
a) ஜி.யு. போப் b) பாரதியார் c) இளங்கோவடிகள் d) சேரன் செங்குட்டுவன்

16. "The Ancient and Modern Poets" அன்ற ஆங்கில நூலை எழுதியவர் யார்?
a) மறைமலையடிகள் b) பரிதிமாற் கலைஞர் c) ஜி.யு. போப் d) கால்டுவெல்

17. <u>பொருத்துக</u>: ( ஆசிரியர் - இயற்பெயர்)
A) மறைமலையடிகள் - 1) துரை மாணிக்கம்
B) நா.மு. வேங்கடசாமி நாட்டார் - 2) சூரிய நாராயண சாஸ்திரி
C) பரிதிமாற் கலைஞர் - 3) சிவப்பிரகாசம்
D) உ.வே.சா - 4) சுவாமி வேதாசலம்
E) பாவலரேறு பெருஞ்சித்திரனார் - 5) வேங்கட ரத்தினம்

| | A | B | C | D | E | | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) | 5 | 4 | 2 | 1 | 3 | b) | 4 | 3 | 2 | 5 | 1 |
| c) | 4 | 3 | 2 | 1 | 5 | d) | 2 | 5 | 1 | 4 | 3 |

18. 1) கோ.கிலாம்பாள் கடிதங்கள, சகுந்தல நாடகம், தமிழர் மதம் ஆகிய நூல்களை எழுதியவர் மறைமலையடிகள்.
2) சைவ சித்தாந்த மகா சமாஜம் (1905) தோற்றுவித்தார்.
3) விஸ்டம் என்ற ஆங்கில இதழை நடத்தினார்.
மறைமலையடிகள் பற்றிய தவறான கூற்று எது?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) 3 மட்டும் d) எதுவும் இல்லை

19. "<u>உரைவேந்தர்</u>" என்று அழைக்கப்பட்டவர் யார்?
a) பரிதிமாற் கலைஞர் b) பரிமேலழகர் c) நா.மு. வேங்கடசாமி நாட்டார் d) நக்கீரர்

20. 1) தமிழ் வீரம் 2) தமிழ் விருந்து 3) தமிழ் இன்பம் 4) தமிழ்ச் சுடர் மணிகள்
ரா.பி. சேதுப் பிள்ளை எழுதிய நூல்களை குறிப்பிடு:

a) 1, 2, 3, 4  b) 1, 2, 4  c) 1, 3, 4  d) 1, 2, 3

21. ஞான போதினி, விவேகசிந்தாமணி இதழ்களில் தமிழ் வியாசங்கள் என்ற கட்டுரை தொகுப்பை வெளியிட்டவர் யார்?
a) ரா.பி. சேதுப்பிள்ளை  b) பரிதிமாற் கலைஞர்  c) ஜி.யு. போப்  d) தேவநேயப்பாவாணர்

22. "நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன்" என்று கூறியவர் யார்?
a) தேவநேயப்பாவாணர்  b) மு. வரதராசனார்  c) திரு.வி.க  d) ரா.பி. சேதுப்பிள்ளை

23. உ.வே. சாமிநாதரை "தமிழ் தாத்தா" என்று அழைத்தவர் யார்?
a) பாரதியார்  b) மீனாட்சி சுந்தரனார்  c) பாரதிதாசன்  d) கல்கி

24. "யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன்" என்று கூறியவர் யார்?
a) உ.வே.சா  b) மீனாட்சி சுந்தரனார் c) திரு.வி.க  d) தேவநேயப்பாவாணர்

25. "நோய்க்கு மருந்து இலக்கியம்" என்றவர் யார்?
a) மு.வ  b) திரு.வி.க  c) பாரதியார்  d) மீனாட்சி சுந்தரனார்

26. "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" நூலினை எழுதியவர் யார்?
a) உ.வே.சா  b) திரு.வி.க  c) சேக்கிழார்  d) மீனாட்சி சுந்தரனார்

27. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று சேக்கிழாரைப் பாராட்டியவர் யார்?
a) மு.வ  b) மீனாட்சி சுந்தரனார்  c) அருணாசல கவிராயர்  d) உடுமலை நாராயண கவி

28. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று அதன் அனுபவங்களை "என் வாழ்க்கைப்போர்" என்ற நூலை எழுதியவர் யார்?
a) மீனாட்சி சுந்தரனார்  b) சி. இலக்குவனார்  c) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்  d) பெரியார்

29. " A History of Tamil Language" என்ற ஆங்கில நூலை எழுதியவர் யார்?
a) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்  b) ஜி.யு. போப்  c) கால்டுவெல்  d) எல்லீஸ் துரை

30. "A Brief study of Tamil Words" என்ற நூலை எழுதியவர் யார்?
a) எல்லீஸ் துரை  b) பரிதிமாற்கலைஞர்  c) சி. இலக்குவனார்  d) ஜி.யு. போப்

31. "எனக்கு வறுமையும் உண்டு மனைவி மக்களும் உண்டு அவற்றோடு மானமும் உண்டு" என்று கூறியவர் யார்?
a) பாவலரேறு பெருஞ்சித்திரனார்  b) பரிதிமாற் கலைஞர்  c) தேவநேயப்பாவணர்
d) மறைமலையடிகள்

32. "அகராதி" என்ற சொல் முதன் முதலாக இடம்பெற்ற நூல் எது?
a) திருக்கோவை  b) திருமந்திரம்  c) திருவாசகம்  d) திருப்பாவை

33. தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களை நடத்தியவர் யார்?
a) பாவலரேறு பெருஞ்சித்திரனார்  b) தேவநேயப் பாவணார்  c) மறைமலையடிகள்

34. 1) கனிச்சாறு 2) ஐயை 3) பாவியக்கொத்து 4) கொய்யாக்கனி
ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?
a) துரைராசு  b) துரைசாமிப் பிள்ளை  c) ஔவை துரைசாமி  d) துரைமாணிக்கம்

35. "தமிழ் செய்யுட் கலம்பகம்" என்ற நூலை எழுதியவர் யார்?

a) வீரமாமுனிவர் b) கால்டுவெல் c) ஜி.யு. போப் d) எல்லீஸ் துரை

36. Poets of the Tamil land, The lives of Tamil saints என்ற நூல்களை எழுதியவர் யார்∴

a) ஜி.யு. போப் b) கால்டுவெல் c) வீரமாமுனிவர் d) ரசூல் கம்சதேவ்

37. "உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்க வாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தை பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனதைக் கவர்ந்தவர் யாரும் இல்லை" என்று கூறியவர் யார்?

a) வீரமாமுனிவர் b) கலிலியோ c) ஜி.யு. போப் d) கால்டுவெல்

38. "கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி" என்பது யாருடைய இயற்பெயர்?

a) ஜி.யு. போப் b) எல்லீஸ் துரை c) ஆறுமுக நாவலர் d) வீரமாமுனிவர்

39. "குட்டித் தொல்காப்பியம்" என்று அழைக்கப்படும் நூல் எது?

a) நன்னூல் b) தொன்னூல் விளக்கம் c) இலக்கண விளக்கம் d) தண்டியலங்காரம்

40. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார் என்று கூறியவர் யார்?

a) அறிஞர் அண்ணா b) பாரதியார் c) ரா.பி. சேதுபிள்ளை d) ஆறுமுக நாவலர்

41. பொருத்துக:

A) ஜியார்ஜ் யுக்ளோ போப் - 1) இத்தாலி
B) தைரிய நாதன் - 2) இங்கிலாந்து
C) கால்டுவெல் - 3) ப்ரான்ஸ்
D) எல்லீஸ் துரை - 4) ஜெர்மனி
E) சீகன் பால்கு ஐயர் - 5) அயர்லாந்து

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 5 | 2 | 4 |
| b) | 4 | 3 | 1 | 2 | 5 |
| c) | 3 | 5 | 2 | 4 | 1 |
| d) | 5 | 2 | 4 | 1 | 3 |

42. பின் வரும் மேற்கத்திய அறிஞர்களில் தமிழில் எழுத்து சீர்திருத்தம் மேற்கொண்டவர் யார்?

1. வீரமாமுனிவர் 2. கால்டுவெல் 3. ஜி.யு. போப் 4. எல்லீஸ் துரை

a) 1, 2, 3 b) 1 மட்டும் c) 1, 2, 3, 4 d) 4 மட்டும்

43. திருக்குறளை ஆங்கிலத்தில் ஜி.யு. போப் மொழி பெயர்ப்பு செய்த ஆண்டு?

a) 1884 b) 1900 c) 1886 d) 1905

44. அம்பலக்காடு என்ற இடத்தில் இயற்கை எய்திய அறிஞர்?

a) ஜி.யு. போப் b) கால்டுவெல் c) எல்லீஸ் துரை d) வீரமாமுனிவர்

45. "அன்னை நிலமும் அன்னை மொழியும் அனைத்து மக்கள் வாழ நினைக்கும்" என்று கூறியவர் யார்?

a) பாவலரேறு பெருஞ்சித்திரனார் b) தேவநேயபாவணார் c) மறைமலையடிகள்
d) பாரதியார்

46. தேவநேயப்பாவணர் எத்தனை சிறப்புப் பெயர்களை பெற்றிருந்தார்?

a) 172 b) 173 c) 175 d) 174

47. தல புராணங்கள் பாடுவதில் வல்லவர் யார்?

a) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் b) தெ.பொ. மீனாட்சி சுந்தரம் c) உ.வே.சா
d) சி. இலக்குவனார்

48. "குடந்தை நகர் கலைஞர் கோவே" என்று உ.வே.சா வினை கூறியவர் யார்?
a) பாரதிதாசன் b) பாரதியார் c) வாணிதாசன் d) முடியரசன்

49. "நாடகவியல்" என்ற நாடக இலக்கண நூலை எழுதியவர் யார்?
a) பரிமேலழகர் b) ரா.பி. சேதுப்பிள்ளை c) பரிதிமாற்கலைஞர் d) மறைமலையடிகள்

50. "சொல்லின் செல்வர்" என்று அழைக்கப்பட்டவர் யார்?
a) ரா.பி. சேதுப்பிள்ளை b) மறைமலையடிகள் c) சூரிய நாராயண சாஸ்திரி
d) உ.வே.சா

# Tamil Answer Sheet Test - 4

1. c
2. a
3. b
4. d
5. c
6. d
7. a
8. c
9. b
10. b
11. c
12. a
13. b
14. d
15. c
16. a
17. b
18. d
19. c
20. d
21. b
22. c
23. d
24. a
25. d
26. d
27. b
28. c
29. a
30. c
31. c
31. c
32. b
33. a
34. d
35. c
36. a
37. c
38. d
39. b
40. c
41. a
42. b
43. c
44. d
45. a
47. a
48. b
49. c
50. a